**M.C.O.P. NO.2141/2019**

**R.W.1 திரு.பாலமுருகன்**

**Date : 14.06.2023**

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :**

02.08.2019 ம் தேதி நடந்த விபத்தில் சம்பந்தப்பட்ட லாரி பதிவு எண்,TN 47 L 5537 எனக்கு சொந்தமான லாரி என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும் விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என்னுடைய லாரியை 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் விபத்து சமயத்தில் காப்பீடு செய்திருந்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்திருந்த காப்பீடு நகல் எமாசாஆ1 ஆவணம் 17.03.2019 முதல் 16.03.2020 வரை செயல்பாட்டில் இருந்தது என்றால் சரிதான். மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள இழப்பீட்டு தொகையை நானும் 2ம் எதிர்மனுதாரரும் கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-**

செந்தில் என்பவர் புதுக்கோட்டையை சேர்ந்தவர், அவர் ஜெராக்ஸ் கடையில் வைத்து இன்சூரன்ஸ் போட்டு கொடுத்து வந்தார். செந்தில் மூலமாக நிறுவனத்தின் அதிகார பூர்வ ஏஜென்ட் யார் என்றால் அவர் கீரனூரைச் சார்ந்தவர் என்று செந்தில் என்னிடம் சொன்னார், அவர் பெயர் எனக்கு தெரியாது. 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு புதுக்கோட்டையில் கிளை அலுவலகம் உள்ளதா என்று எனக்கு தெரியாது. 2ம் எதிர்மனுதாரர் இந்த வழக்கின் எமாசாஆ1 ஆவணம் போலியானது என்று கட்சி செய்த விவரம் எனக்கு தெரியும். இந்த விவரத்தை தெரிந்துகொண்ட பின்னர் செந்திலை போனில் தொடர்பு கொண்ட போது அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை. எமாசாஆ1 பாலிசி 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தால்

வழங்கப்பட்ட பாலிசி நகல் அல்ல என்றும் அந்த காப்பீட்டு நகல் மூலமாக 2ம் எதிர்மனுதாரர் எந்தவித இழப்பீட்டு தொகையும் மனுதாரருக்கு கொடுக்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல.